**Copy of Deposition**

## சார்பு நீதிமன்றம், கொடுமுடி, ஈரோடு மாவட்டம்.

2025 ம் ஆண்டு **மார்ச் மாதம் 05-ம் தேதி** மனுதாரர் தரப்பு சாட்சி **ம.சா.2-ன்** வாக்குமூலம் 1989ம் ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படி எம்.ராமச்சந்திரன், பி.காம்.,பி.எல்., என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

**H.M.O.P.No.** 04 /2024

**ம.சா:-2 அருண்குமார்**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி(எதிர் மனுதாரர் தரப்பில்):-**

எதிரி மனுதாரர் பட்டய படிப்பு படித்ததாக சொல்லியுள்ளேன் என்றும், எந்த கல்லூரியில் படித்தார் என்றால் பாரதியார் பல்கலைகழகத்தில் படித்துள்ளார். எதிரி மனுதாரர் ஒரே முறையில் அனைத்து பாடங்களிலும் தேர்ச்சி பெற்றாரா அல்லது அரியர் வைத்து தேர்ச்சி பெற்றாரா என்ற விவரம் சொல்ல முடியுமா என்றால் அதை பற்றிய விவரம் தெரியாது. இதுநாள் வரை குழந்தைகளை பார்ப்பதற்காக நீதிமன்றத்தின் மூலமாக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். அதற்கு குறிப்பிட்ட காரணம் எதாவது உண்டா என்றால் இல்லை. மத்திய அரசு பணியாளர்களுக்கு வழங்கும் சம்பளத்துடன் குழந்தைகளுக்காக கல்விக்கு என ஒரு தொகையும், வீட்டு வாடகை படியும் வழங்கி வருகிறார்கள் என்றால் வீட்டு வாடகை படி பெற்று வருகிறேன். கல்வி தொகை பெறவில்லை. நான் குழந்தைகளுக்கான கல்வி உதவி தொகையை பெற்றுக்கொண்டுவிட்டு இந்த மனுவிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய பிரமாண வாக்குமூலம் பத்தி 11ல் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் எல்லாம் உண்மைக்கு புறம்பானது என்றால் சரியல்ல. நானும் விருப்பப்பட்டுதான் எதிர் மனுதாரரை திருமணம் செய்து கொண்டேன் என்றால் சரிதான். எதிர் மனுதாரர் முதல்

குழந்தையை எடுத்துக்கொண்டு 2020ம் வருடம் பிப்ரவரி மாதம் நீ எப்படியோ போய் தொலை உன்னுடன் என்னால் வாழ முடியாது என சண்டையிட்டு இனிமேல் கணவன், மனைவி உறவை முறித்துக்கொள்ளலாம் என சொல்லி தாயார் வீட்டிற்கு சென்றதாக சொல்லியுள்ளது தவறு என்றும், எதிர் மனுதாரர் இரண்டாவது பிள்ளை பேறுக்காகத்தான் அவரது தாயார் வீட்டிற்கு சென்றார் என்றால் சரியல்ல. நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பில் எதிர் மனுதாரர் என்னை விட்டு பிரிந்து போனதாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பில் கண்டுள்ள சங்கதிகளுக்கும், மனுவிற்கும் மிகுந்த முரண்பாடான சங்கதிகள் உள்ளன என்றால் சரியல்ல. நான் கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பிற்கு எதிர் மனுதாரர் தகுந்த பதில் அறிவிப்பு கொடுத்த பின்னரும் எனக்கு தகுந்தாற்போல் இந்த மனுவை தயாரித்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கும், எதிர் மனுதாரருக்கும் நேரடியாக எந்த வித கருத்து வேறுபாடும் இல்லை என்றும், என் தாயாரின் பேச்சை கேட்டுக்கொண்டு விவாகரத்து கோரி இந்த மனுதாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.நான் தாக்கல் செய்துள்ள மனுவில் விவாகரத்து பெறுவதற்கான காரணங்கள் எதுவும் முன்வைத்து தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. என் தாயாருக்கு ஏற்பட்ட பேராசையின் காரணமாகத்தான் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிர் மனுதாரரின் தந்தை இறந்து எத்தனை மாதங்கள் ஆகிறது என்றால் 2 மாதங்கள் ஆகிறது. எதிர் மனுதாரரின் தகப்பனார் இறப்பு சடங்கில் நான் கலந்து கொண்டேனா என்றால் கலந்து கொள்ளவில்லை, என்னுடைய குடும்பத்தில் இருந்து யாராவது கலந்து கொண்டார்களா என்றால் இல்லை. எதிர் மனுதாரரின் தந்தை என்ன காரணத்தினால் இறந்தார் என்ற விவரம் தெரியுமா என்றால் நோய்வாய்ப்பட்டு இறந்ததாக சொன்னார்கள். எதிர் மனுதாரரின் தந்தை இறந்த அன்று இரவு எதிர் மனுதாரரின் உறவினர்கள் என்னையும், என் குடும்பத்தாரையும் அழைப்பதற்காக எங்கள் வீட்டிற்கு வந்தார்களா என்றால் இல்லை.

## Copy of Deposition

எதிர்மனுதாரரின் உறவினர்கள் சுமார் 20 பேர் எதிர் மனுதாரரின் தந்தை இறந்த அன்று எங்கள் வீட்டிற்கு வந்து என்னையும், எனது குடும்பத்தாரையும் அழைத்து செல்ல சமாதானம் பேசியபோது எனது தாயார் அனைவரும் வெளியே போகவில்லை என்றால் காவல்நிலையத்திற்கு தகவல் தெரிவிப்பேன் என்று சொல்லி அவர்கள் அனைவரையும் வெளியே போகவைத்துவிட்டார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நானும், எதிர்மனுதாரரும் சேர்ந்து வாழ்ந்தால்தான் இரண்டு குழந்தைகளின் எதிர்காலம் நன்றாக இருக்கும் என்றும், நான் எதிர் மனுதாரருடன் சேர்ந்து வாழ்வதுதான் நியாயமானது என்பதால் இம்மனுவானது தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் மனுதாரருடன் சேர்ந்து வாழ எனக்கு விருப்பம் இல்லை. எதிர் மனுதாரர் என்னுடன் சேர்ந்து வாழ வேண்டும் என்பதற்காகத்தான் திருமண பந்தத்தை மீட்டெடுக்க கோரி மனுதாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. இந்த மனுவானது எதிர் மனுதாரர் செலவு தொகையுடன் தள்ளுபடியாகத்தக்கது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:- இல்லை**

| |
|---|
| Taken down me in Open Court read over to the witness and acknowledge by |
| Interpreted<br>Him / Her To Be Correct<br><br>(Sd xxx M. Ramachandran)<br>Subordinate Judge,<br>Kodumudi |